ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1969/61 - 2016 ජූනි මස 03 වැනි සිකුරාදා - 2016.06.03
1969/61 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது.கு. இல.: ஈபி/எல்டீ/ஏஏ/2008-2015/01
காணி.அ.கு.இல.: எல்டீ/05/2008/எச்டபிள்யு/எஸ்ரீடீபி/ஜேபீஜீ/272

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், 25ஏ, நவதகல கிராம அலுவலர் பிரிவு, நவதகல கிராமத்தில் அமைந்துள்ள, காலி நில அளவை அதிபதி சார்பாக நில அளவை அத்தியட்சகரினால் 2016.03.30 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைப்பட இல. கா 4166 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0638 ஹெக்டயார் இல் 1 தொடக்கம் 2 வரை உள்ள காணித்துண்டுகள் (02 துண்டுகள்) எல்லைகள்:-

*1.* **துண்டு இலக்கம் 1**
காணியின் பெயர்: வத்தஹேனகொட்டுவ; காணியின் விபரம்: வீதி (பகுதி); உரிமை கோருவோர்: அரசு; முதன்மை உரிமை கோருவோர்: திலக் இத்தமல்தெனிய, அடகொஹொட, நவதகல (ஆ.வ. 9500 இன் 2267 ஆவது காணித் துண்டின் பகுதி); காணியின் பரப்பளவு: 0.0229 ஹெக்டயார்.

*2.* **துண்டு இலக்கம் 2**
காணியின் பெயர்: வத்தஹேனகொட்டுவ; காணியின் விபரம்: திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருவோர்: அரசு; முதன்மை உரிமை கோருவோர்: திலக் இத்தமல்தெனிய, அடகொஹொட, நவதகல (ஆ.வ. 9500 இன் 2267 ஆவது காணி துண்டின் பகுதி); காணியின் பரப்பளவு: 0.0409 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு எல்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
எல்பிட்டிய.

பிரதேச செயலகம்,
எல்பிட்டிய.

6 - 586

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.